வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 154/2019
வழக்குசாட்சி PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன், உதவி ஆய்வாளர் , பால்பண்ணை காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | லட்சுமணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 53 |

தேதி 11.02.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மாதவரம் பால்பண்ணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் தேவன் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் தேவன் என்பவர் நிலைய பணியில் இருந்தபோது கடந்த 9.11.2013 அன்று நிலைய பணியில் இருந்த போது அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று அங்குச் சென்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட சீனிவாசன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். எம்.2 மாதவரம் பால்பண்ணை காவல் நிலைய குற்ற எண். 1499/2013 இதச பிரிவு 341, 294(b), 324, 506(2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது முறையே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் இவ்வழக்கின் சாட்சி சீனிவாசன், பாலகிருஷ்ணன், அர்ஜுனன் ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே மாலை 06.00 மணிக்கு சாட்சிகளான சோமநாதன், சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் எதிரிகளை அவர் தேடிவந்த நிலையில் மறுதினம் காலை 10.30 மணிக்கு ICF அம்பேத்கர் அரங்கம் அருகே எதிரிகளை கைது செய்து முதலாம் எதிரி தன்னிச்சையாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மோகன், ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவுச் செய்துள்ளார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்துச் சென்றால் சம்பவ இடத்தையும், கத்தியையும் அடையாளம் காட்டுவேன் என்ற பகுதி அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் வில்லிவாக்கம் நியூ ஆவடி ரோடு அருகே முட்புதரில் இருந்து எடுத்து எடுத்து எதிரி ஆஜர் செய்த கத்தியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

4. பின்னர் இவ்வழக்கில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளித்த மருத்துவர்கள் வீரலட்சுமி, கார்த்திகேயன் ஆகியோரை விசாரித்து அவர்களிடம் இருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றுள்ளார். விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.7, 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காயச்சான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிவுகளை இதச பிரிவு 341, 294(b), 324, 506(2) @ 341, 294(b), 326, 506(2) ன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மூலம் பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து புலன் விசாரணை அதிகாரி எதிரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கினை நான் விசாரணைச் செய்தேனா என்றால் இல்லை. நான் வழக்கு கோப்புகளை எவ்வளவு நாட்களாக கையாலுகிறேன் என்றால் 6 மாதமாக. இவ்வழக்கினைப் பற்றி எதுவும் நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். பொய்யாக எதிரிகள் மீது புனையப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**